# வளவைகங்கை திசைதிருப்பப்பட்டது

ered as a Newspaper in Ceylon * * தம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 9 இதழ் 122

தபாற் பெட்டிஎண்: 49
போன் 889

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க வைகாசி 30 ரபிஅல் 4 செவ்வாய்க்கிழமை [13-6-67]

## பல ஏக்கர் நிலத்துக்கு பாசன வசதி

கொழும்பு, திங்கள் வளவை கங்கை திசைதிருப்பிவிடப்பட்டது. இந்நிகழ்ச்சியை காணி அபிவிருத்தி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா ஆரம்பித்து வைத்தார்.

உடவளவை அணைக்கட்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்யும் முகமாக வளவை கங்கை திசைதிருப்பப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட திஸ்ஸ மகாராம எம். பி. திரு. எதிரி சூரியா, தனது முயற்சி பலித்துவிட்டதென்றும் இனி தாம் இறந்தாலும் பரவாயில்லை என்றும் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினர்.

வளவை கங்கை திசை திருப்பிவிடப்பட்டதன் மூலம் 28,000 ஏக்கர் நெற்செய்கைக்கும் 16,000 ஏக்கர் கரும்புச் செய்கைக்கும் 200 ஏக்கர் பழமரச் செய்கைக்கும் பாசன வசதி கிடைக்கும்.

கங்கை திசைதிருப்பிவிடப்பட்டதும் நீர்பாய்ந்து கரையோரப் பகுதி வற்றியதும் அங்கு திரண்டுநின்ற மக்கள் பலர் ஆற்றுப்படுகையில் மாணிக்கக் கல் தோண்டுவதில் போட்டி போட்டு ஈடுபட்டனர்.

# படை நடமாட்டத்தை நிறுத்த ஐ. நா. உத்தரவு

## இஸ்ரேல், சிரியாவுக்கு பாதுகாப்புச் சபை கோரிக்கை

### சமாதான முயற்சியில் இறங்க டிகாலுக்கு அழைப்பு

நியுயோர்க், ஜூன் 12

**இஸ்ரேலும் சிரியாவும் தங்கள் துருப்புக்களின் நடமாட்டங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று இன்று காலை கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபை இரு நாடுகளையும் கேட்டுக் கொண்டது.**

சிரியா எல்லைக்குள் இஸ்ரேலியர்கள் மேலும் ஆயுதங்களைக் கொண்டுவந்து குவிப்பதாக சிரியா குற்றம் சாட்டியிருந்தது.

ஆனல் இக் குற்றச்சாட்டை இஸ்ரேல் மறுத்திருக்கிறது.

யுத்தத்தில் கைப்பற்றிய இடங்களிலிருந்து விலகுவதற்கு இஸ்ரேல் மறுத்து விட்டது.

சினய் பகுதியில் இஸ்ரேல் கைப்பற்றிய இடங்களில் இஸ்ரேலிய நிர்வாக அதிகாரிகள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுவருகின்றனர்.

**யூகோஸ்லேவியா**

யூகோஸ்லேவியா இஸ்ரேலுடனுன ராஜிய உறவுகளை முறித்துக்கொண்டு விட்டது ஜனதிபதி டிட்டோவிடமிருந்து இந்திய பிரதமருக்கு இன்று ஒரு செய்தி கையளிக்கப்பட்டது.

**டிகோலுக்கு 6 நாடுகள் கோரிக்கை**

மேற்காசிய நெருக்கடியில் தலையிட்டு அமைதி ஏற்பட உதவுமாறு பிரான்ஸில் உள்ள அரபு நாடுகளின் தூதர்கள் கோரியுள்ளனர். நெருக்கடியில் சம்பந்தப்பட்டுள்ள இருநாடுகளின் மதிப்பையும் பிரான்ஸ் பெற்றிருப்பதாக அமைதியை ஏற்படுத்த அது முன்வருவது வரவேற்கப்படும் என்று அவர்கள் கருதுகிறார்கள். காஸாவில் இருந்து தாயகம் புறப்பட்டுள்ள ஐ. நா. அவசரகாலப்படையின் இந்தியப் பிரிவின் முதல்பகுதியினர் இன்று பம்பாய் வந்து சேர்ந்தனர்.

### ''பழைய நிலைகளுக்குத்திரும்ப இஸ்ரேலை வற்புறுத்துக''

#### பிரதம மந்திரிக்கு எதிர்க்கட்சி தலைவர்கள் தந்தி

கொழும்பு, திங்கள் மேற்காசியாவில் சண்டை ஏற்படுவதற்குமுன்இஸ்ரேல் படைகள் இருந்த இடங்களுக்குத் திரும்பிச்செல்லும் படி ஐ. நா.வில் வற்புறுத்த இலங்கையின் பிரதிநிதிக்கு உத்தரவிடுமாறு எதிர்க்கட்சித் தலைவர்கள் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அவசரத் தந்தியொன்றை அனுப்பியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித்தலைவர்களின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. மைதிரிபால சேனநாயக பிரஸ்தாப தந்தியின் கையெழுத்திட்டிருக்கின்றார்.

இஸ்ரேல் தனது பழைய நிலைகளுக்கு வாபஸ்பெறுவதற்கு மறுத்தால் இலங்கை இஸ்ரேலுடனுன ராஜீயத் தொடர்புகளை முறித்துக் கொள்ள வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தற்காலிக தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயகா ஐ. நா. பொதுக்காரியதரிசிக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் இஸ்ரேலை மீண்டும் தங்கள் பழைய நிலைகளுக்கு திரும்புமாறு வற்புறுத்த பாதுகாப்புச் சபைத்தலைவரை இலங்கை எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

---

### இலங்கரத்தின வருவார்

புன்னாலைக் கட்டுவன், திங்'

இணுவில் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கிளையை உத்தியோக பூர்வமாகத் திறந்து ஆரம்பித்து வைப்பதற்காக திரு. ரி. பி. இலங்கரத்ன எம். பி. உட்படப் பல கட்சிப் பிரமுகர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்கு இம்மாத இறுதியில் வருவார்களென அறியப் படுகிறது.

## இன்று பிரதமர் கனடா பயணம்



கொழும்பு, திங்கள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நாளை கனடா புறப்படுகிறார். கனடாவில் மொன்றியாலில் நடைபெறும் நூற்றாண்டுக் கொண்டாட்டத்திலும், பொருட்காட்சி விழாவிலும் பிரதமர் கலந்துகொள்வார். பின்னர் ஒட்டவாவுக்குச் சென்று கனடா பிரதமர் பியர்ஸனை சந்தித்துப் பேசுவார். ஜூன் 25-ம் திகதி தனது கனடா விஜயத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து பிரதமர் ஜப்பான் செல்வார். ஜப்பானில் ஒரு வாரகாலம் தங்கியிருந்து ஜூன் 30-ம் திகதி ஜப்பானை விட்டுப் புறப்பட்டு ஜூலை 1-ம் திகதி இலங்கை வந்துசேருவார்.

மோட்டார் பவனியில் பிரதமர் கட்டுநாயகா விமான நிலயத்துக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப் படுவார், கட்டுநாயகா விமான நிலயத்திலிருந்து விமான மூலம் கனடா புறப் படுவார்.

## இந்திய ராஜதந்திரிக்கு சீனவில் 'கட்டுப்பாடு'

### உளவு பார்த்ததாக குற்றச்சாட்டு

ஹாங்காங், ஜூன் 12 பீகிங்கிலுள்ள இந்தியத் தூதரகத்தின் இரண்டாவது உயர்தரக் காரியதரிசி திரு. ரகுனத் தமது ராஜதந்திரக் கடமைகளைச் செய்யமுடியாபடி சீன அரசாங்கம் தடைவிதித்திருப்பதாகச் செய்தியொன்று கிடைத்துள்ளது.

சீன வெளிநாட்டுஅமைச்சு இந்தியத் தூதரை அழைத்துக்கடுமையான ஆட்சேபக் குறிப்பொன்றைக் கையளித்துள்ளது. சீனவிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் உளவு வேலைகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப் பட்டது. திரு. ரகுனத்தும் இன்னெருவரும்சீனராணுவ நிலைகளைப் படம்பிடிப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், படங்கள் கைப்பற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டுகள் உண்மையில்லையென்று இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. ரகுனத் சீனவை விட்டு வெளியேறுவதும் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

## பக்தி நிறைந்து விளங்கும் சேக்கிழார் விழா

### யாழ்ப்பாணத்தில் நேற்று கோலாகலத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம். செவ். 'மனிதனுக்குக் கல்வி இன்றியமையாத ஒன்றாகும். அதற்காக மனிதனல் எல்லாவற்றையுமே கற்கமுடியாது பல நூல்களையும் கற்கும் மனிதன் அதில் தேவையானவைகளை மாத்திரம் நடைமுறைக்குக் கொண்டுவரல் வேண்டும். இதையே திருவள்ளுவர் பெருமான் 'கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக' எனக் கூறியுள்ளார். எனவே நாம் கற்கமுனையும் எதையும் ஐயமின்றித் தெளிவுடனும், துணிவுடனும், உண்மையுடனும் கற்றலே அவசியமாகும். இதையே சேக்கிழார் பெருமானும் தனது திருத்தொண்டர் நாயனர் புராணத்தில் விளக்கியுள்ளார்.'

இவ்வாறு நேற்றுக்காலை ஆரம்பமாகிய அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தில் இரண்டாவது சேக்கிழார் விழாவில் 'சேக்கிழார் காட்டும் தவ வலிமை' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் நல்லைஆதீனத் தவத்திரு சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நேற்றைய விழாவின் காலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. காலை 8-30 மணி

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: எல். ஏ/1244

1964ம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தல் [திருத்தச்] சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460]

7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1967ஆம் ஆண்டு யூன் மாதம் 9ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்: 14,752 பகுதி IIIஇல் பார்க்கவும்.

அட்டவணை

| | |
|---|---|
| காரியாதிகாரியின் பிரிவு:- | கராச்சி. |
| கிராமத்தின் பெயர்:- | கண்டாவளை. |
| காணியின் பெயர்:- | பேய்ப்பூதன் காடு. |
| ஆரம்ப பட இல:- | யா 114இல். |
| துண்டு இல:- | துண்டு இல. 1. |

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

G. P. 3438 13-6-67

குறிப்பு: எல். ஏ/1256

1964ம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தல் [திருத்தச்] சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460]

7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1967ஆம் ஆண்டு யூன் மாதம் 9ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்: 14,752 பகுதி IIIஇல் பார்க்கவும்.

அட்டவணை

| | |
|---|---|
| காரியாதிகாரியின் பிரிவு:- | தென்மராட்சி. |
| கிராமத்தின் பெயர்:- | நாவற்குளி. |
| காணியின் பெயர்:- | தில்லையோடை. |
| ஆரம்ப பட இல:- | யா 96இல். |
| துண்டு இல:- | துண்டு இல. 1ம் 2ம். |

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

G. P. 3444 13-6-67

குறிப்பு: எல். ஏ/1264

1964ம் ஆண்டின் 28ம் இலக்க காணி எடுத்தல் [திருத்தச்] சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் [அத்தியாயம் 460].

7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1967ஆம் ஆண்டு யூன் மாதம் 9ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்: 14,752 பகுதி IIIஇல் பார்க்கவும்.

அட்டவணை

| | |
|---|---|
| காரியாதிகாரியின் பிரிவு:- | வடமராட்சி. |
| கிராமத்தின் பெயர்:- | புலோலி கிழக்கு. |
| காணியின் பெயர்:- | நொச்சியடிக்கலட்டி அல்லது நொச்சியாகலட்டி அல்லது நொச்சிக்கலட்டி |
| ஆரம்ப பட இல:- | ஆரம்ப பட இல. யா 42இல். |
| துண்டு இல:- | துண்டு இல. 1. |

தி. முருகேசபிள்ளை,
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

G. P. 3441 13-6-67

## ஏலவிற்பனவு

''வசந்தம்'', மானிப்பாய் திரு. வி. கே. இராசலிங்கம் வீட்டில் 1-4-66 திகதிக்கு முன்வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவற்றை 1-7-67 சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அதே இடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்.

2341

## கருத்தரங்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அகில இலங்கை அரசாங்க சேவையாளர் தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் ஆதரவில் இம்மாதம் 15ம்திகதி மாவட்டசபை பற்றி ஒரு கருத்தரங்கம் நிகழும் யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்தில் நடைபெறும் இக்கருத்தரங்கில் எம்.பி. திரு. ஜி. ஜி, பொன்னம்பலம் கலந்து கொண்டு பேசுவார். திருவேலுப்பிள்ளை தலைமைவகிப்பார்.

# நயினாதீவு யாத்திரிகர்க்கு போக்கு வரத்து வசதி

யாழ்ப்பாணம், செவ்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் திருவிழாவிற்கு கழுதைப்பிட்டி, குறிக்காட்டுவான், ஊர்காவற்றுறை ஆகிய துறைமுகங்களால் யாத்திரீகர்கள் செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து மேற்குறித்த மூன்று துறைமுகங்களுக்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை விசேஷமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விசேஷமாக கழுதைப்பிட்டித் துறைமுகத்தில் லோஞ்சு வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பிரத்தியேக வாகனங்களில் வரும் யாத்திரீகர்கள் குறிக்காட்டுவான் துறைமுகத்தால் செல்ல லோஞ்சு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

யாத்திரீகர்கள் தாம் புறப்பட்ட அதே துறைமுகங்களால் திரும்புவதற்கு உதவியாக அத்துறைமுகங்களிலிருந்து செல்லும்மோட்டார் லோஞ்சு, வள்ளங்கள் ஆகியவற்றில் நிறக்கொடிகள் போடப்பட்டிருக்கும் என்றும், கழுதைப்பிட்டித் துறைமுகத்துக்கு மஞ்சள் நிறமும். குறிக்காட்டுவான் துறைமுகத்துக்கு பச்சை நிறமும், ஊர்காவற்றுறை துறைமுகத்துக்கு நீல நிறமும் உரியவை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாத்திரீகர்களை ஏற்றிச் செல்ல விரும்பும் மீன்பிடி மோட்டார் வள்ளங்களின் சொந்தக்காரர்கள் ஊர்காவற்றுறைக் காரியாதிகாரியின் கந்தோரில் இம்மாதம் 16-ம் திகதிக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21-ம் திகதி தேர்த்திருவிழாவாகும்.

## வட்டுக்கோட்டை கிராமசபை

வட்டுக்கோட்டை, திங்கள்

இருபது வட்டாரங்களைக் கொண்ட வட்டுகோட்டைக் கிராம சபையை இருபிரிவுகளாகப்பிரித்து நிறுவ உள்ளூராட்சி ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

வட்டுக்கோட்டை கிழக்கு மேற்கு கிராமசேவகர்களின் வட்டாரங்கள் ஒரு உள்ளூராட்சிமன்றமாகவும்அராலிகிழக்கு-தெற்கு-மேற்கு-வடக்கு கிராமசேவகர்களின்வட்டாரங்கள் இன்னோர்மன்றமாகவும் தனித்துஇயங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என அறியப்படுகிறது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடும் வளவும்

யாழ்ப்பாணம் கதீட்றல் வீதியில் பெரிய கிறீஸ்தவ ஆலயம் சென்பற்றிக்ஸ் பாடசாலை, கொன்வென்ற் பாடசாலை இவற்றுக்கு அருகாமையில் 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் விளம்பர இல. 2434, ஈழநாடு மே/பா த. பெ. எண் 49 யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2434

மோட்டார் வாகனம்

புதிய ரயர்களும் பற்றறியுமுடைய நல்ல நிலைமையிலுள்ள Fiat 1100 EN 1913 விற்பனைக்குண்டு. ஊர்காவற்றுறை வாடி வீட்டில் 15-6-67 வரையும் பார்வையிடலாம். விபரங்கட்கு வாடிவீடு ஊர்காவற்றுறை பொ. விசுவலிங்கம் அவர்களைத் தொடர்பு கொள்ளவும். 2431

### காணவில்லை

லொறிப் பதிவுப் புத்தகம்:

லொறி 33 சிறி 833 நம்பருடைய லொறிப் பதிவுப் புத்தகம் இன்று 11-ந் திகதி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி ரோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு ஒப்படைக்கவும். சிதம்பரப்பிள்ளை, முருகப்பிள்ளை கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன் துறை. 2433

## மண்வெட்டி

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு பலநோக்குக்கூட்டுறவுசமாஜத்தினர் கமக்காரர்களுக்கு மண்வெட்டி பெற்றுக்கொடுப்பதில் அதிக சிரத்தை எடுத்துள்ளனர். வலி மேற்கு சமாஜத்தினர் தமது அதிகாரத்துக்குட்பட்ட பலநோக்குச் சங்கங்களுக்கு மண்வெட்டி பங்கிடு செய்வதோகவும் கமக்காரர்கள் தத்தமதுசங்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.


அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்



உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி காளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ்-வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட
பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான் பிடித்த நிலைகளிலிருந்து செல்ல இஸ்ரேலின் பிடிவாதமான மறுப்பு

## அரபு நாடுகள் நேரடிப் பேச்சுக்கு வர வேண்டுமென நிபந்தனை

### அல்ஜீரியப் பிரதமர் மாஸ்கோ சென்றார்

### 'உலகப் போரை தவிர்க்கவே ரஷ்யா குறுக்கிடு செய்யவில்லை'

நியுயோர்க், ஜூன் 12

போர் நிறுத்த உத்தரவை இஸ்ரேல் மீறியதாகவும், தொடர்ந்து மீறுவதாகவும் சிரியாவினால் செய்யப்பட்ட புகாரை விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்து சபை இன்று காலை கூடியுள்ளது.

சிரிய - இஸ்ரேல் எல்லையில் ஐ. நா. சமாதானக் கமிஷனின் அங்கத்தவர்கள் ரோந்து சுற்றி வந்தனர். இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் மேலே பறந்து சென்றன. சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. இப்போது அப்பகுதிகளில் அமைதி நிலவுகிறது.

ஐ. நா. சமாதானக் கமிஷனின் தலைவரான ஜெனரல் புல்லே; உடனடியாக நிலைமை பற்றி அறிவிக்கும் படி ஐ. நா. பொதுக்காரியதரிசி யு தாண்ட் கேட்டுள்ளார்.

டமாஸ்காஸிலிருந்து 40 மைல் தொலைவில் உள்ள சிரிய நகரான குனித்ராவைக் கைப்பற்றியதை இஸ்ரேல் மறுத்துள்ளது.

**நாஸர் நடவடிக்கை**

ஐ. அ. குடியரசு இராணுவத் தலைமையில் ஜனாதிபதி நாஸர் பல மாற்றங்களைச் செய்துள்ளார். முப்படைத் தளபதி என்ற புதிய பதவியைப் ஏற்படுத்தி, அப்பதவியில் ஜெனரல் முகம்மது பவுஸியை அமர்த்தியுள்ளார். முகம்மது அபுசுலிஸை விமானப்படைத் தளபதியாக்கியிருக்கிறார். ஏழு ஜெனரல்களைப் பதவி நீக்கம் செய்துள்ளார். நால்வரைக் கட்டாய ஓய்வில் அனுப்பியுள்ளார்.

கெயிரோ இப்போது மாமூல் நிலைக்குத் திரும்பியுள்ளது. ஆறுநாள் போருக்குப் பின்னும் மக்களின் மனோநிலை பாதிக்கப்படவில்லை. வழக்கம் போல், தமது அலுவல்களில் ஈடுபட்டனர். கடைகளும், காரியாலயங்களும் திறக்கப்பட்டுள்ளன.

**டயான் பேச்சு**

அமெரிக்காவில் ஒலிபரப்பப்பட்ட டெலிவிஷன் செய்தியில், இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி ஜெனரல் டயான், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பெரிய வல்லரசுகளின் குறுக்கீட்டை இஸ்ரேல் நிராகரிப்பதாகக் கூறினார். இஸ்ரேல், அரபு நாடுகளுடன் நேரடிப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு, பிரச்னைகளுக்குத் தீர்வுகாண விரும்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். ''அவர்கள் எம்மைச் சந்திக்க மறுத்தால், நாம் பிடித்துள்ள இடங்களிலிருந்து நாம் நகரமாட்டோம்'' என்றார் அவர்.

காஸாப் பகுதியை இஸ்ரேல் ஐ. அ. குடியரசிடம் திருப்பிக்கொடுக்க மாட்டாதென்றும், ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரையை விட்டுக் கொடுக்காது என்றும், ஜெருசேலமும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே தொடர்ந்து இருக்கும் என்றும் ஜெனரல் டயான் தெரிவித்தார். ஜெருசலத்தில் சகல மதங்களுக்கும் சுதந்திரம் அளிக்கப்படுமென்று அவர் உறுதியளித்தார்.

அக்காபா வளை குடாவின் தெற்குக் கரையிலுள்ள ஷரம்-எல்-ஷேக்கை, வளை குடாவில் சுதந்திரப்போக்குவரத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்படாத வரை, இஸ்ரேல் ஐ., அ. குடியரசிடம் ஒப்படைக்க மாட்டாது என்றும் அவர் கூறினார்.

சூயஸ் கால்வாயைப் பற்றிக் குறிப்பிடுகையில், அது ஒரு சர்வதேச நீர்வழி என்பதே இஸ்ரேலின் கொள்கையாகும் என்றார் ஜெனரல் டயான். சூயஸ் கால்வாயைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை இஸ்ரேலுக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறினார்.

இப்போதுள்ள நிலைகளை இஸ்ரேல் தன்னிடம் வைத்துக்கொள்வதால், பலபொருளாதார, சமூகப்பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக ஜெனரல் டயான் அறிவித்தார். ஜோர்டான் ஆற்றின் மேற்குப்பகுதியில் 15 லட்சம் அரபு மக்கள் இருக்கின்றனர். இவர்களில் ஆயிரக்கணக்கானோர், ஜோர்டான் கையிலுள்ள பகுதிகளுக்கு அகதிகளாக வந்து சேருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இந்த அரபுமக்களை இஸ்ரேலுடன் சேர்த்துக் கொள்வதென்ற கேள்விக்கே இடமில்லை. ஒரு யூத-அரபிய நாடு உருவாகுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமுடியது' என்று ஜெனரல் டயான் அறிவித்துள்ளார்.

**மாஸ்கோ புறப்பட்டார்**

அல்ஜீரியப் பிரதமர் புமேதியான் இன்று மாஸ்கோவுக்குப் புறப்பட்டார். அவர் அங்கு சோவியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார். மாஸ்கோவுக்குப் புறப்பட முன்னர் நாட்டு மக்களுக்கு விடுத்த வானொலிச் செய்தியில் பிரதமர் புமேதியான் அரபுநாடுகளுக்கெதிரான சதித்திட்டம் லண்டனிலும், வாஷிங்டனிலும் உருவாக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டினர். கம்யூனிஸ்ட் நாடுகளைத் தமது பொறுப்புகளைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ள முன்வருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

ஐ. நா.வின் போர் நிறுத்தக் கோரிக்கையை அல்ஜீரியா இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

**இந்திய திட்டத்துக்கு ஆதரவு**

ஐ. நா.வில் இந்தியாவின் நான்கு அம்சச் சமாதானத் திட்டத்துக்கு ஆசிய - ஆபிரிக்க நாடுகளி[illegible] பொதுவாக வரவேற்பு கிடைத்துள்ளது. ஆனால் இத்திட்டத்தை மேற்கு நாடுகள் ஆதரிக்குமென நம்ப இடமில்லை. போருக்கு முன்னிருந்த நிலைகளுக்குத் திரும்பிச் செல்லாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த முற்படுவதினால் ஏற்படக்கூடிய முன் உதாரணங்கள் பற்றி ஆசிய - ஆபிரிக்க நாடுகள் உணர்ந்துள்ளன.

**குற்றச்சாட்டு**

இஸ்ரேல் பிடித்துள்ள பகுதிகளில் வாழும் அரபு மக்களை இஸ்ரேல் கொடுமைப்படுத்துவதாக சோவியத் யூனியனும், ஜோர்டானும் குற்றஞ்சாட்டியுள்ளன.

ஜோர்டான் பகுதியில் விஜயம் செய்த பெய்ரூட்டைச் சேர்ந்த டாக்டர்கள் கோஷ்டி ஒன்று, காயமுற்றவர்களில் 25 சத விகிதத்தினர் நேப்பாம் குண்டு வீச்சினால் காயமுற்றவர்களாவார்கள் என அறிவித்துள்ளது. இஸ்ரேல் துருப்புகள் பாகுபாடின்றி ஆஸ்பத்திரி. அம்புலன்ஸ் வண்டிகள் மீதும் குண்டு வீசியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

**மந்திரிசபை கமிட்டி**

இஸ்ரேல் பிடித்துள்ள பகுதிகளின் நிர்வாகம் பற்றி முடிவு செய்ய இஸ்ரேல் மந்திரிசபைக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. போர் ஆரம்பமாகியதற்குப் பின் இப்போதுதான் முதற் தடவையாக இஸ்ரேல் மந்திரிசபை கூடியது.

**679 இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர்**

அரபுநாடுகளுடனான ஆறு நாள் போரில் இஸ்ரேல் 679 பேரை இழந்துள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு இலாகா அறிவித்துள்ளது. 2,500க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். இவர்களில் 250 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்பட்டது.

ஐ. அ. குடியரசின் பந்தனத்திற்குப் பிறகு திரான் ஜலசந்தியூடாக இஸ்ரேல் [illegible] முதற் [illegible] அதன் பெயர் 'டால்பின்' ஆகும்.

---

சாவகச்சேரி ஆஸ்பத்திரி

## திருத்தவேலைக்குரூ. $2\frac{1}{2}$ லட்சம்

### சுகாதாரமந்திரி உறுதி

சாவகச்சேரி, திங்.

''சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் வளர்ச்சி கருதி புதிய திருத்தங்களுக்காக இரண்டு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை ஒதுக்கத் தீர்மானித்துள்ளேன். இது பற்றி கொழும்பு திரும்பியதும் நான் அமைச்சில் கலந்தாலோசிப்பேன். கடந்த தடவை நான் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த போதிருந்த நிலையிலும்தற்போதுஇந்தஆஸ்பத்திரி அதிக முன்னேற்றம் அடைந்துள்ளதை என்னால் காண முடிகின்றது. அத்துடன் இந்த ஆஸ்பத்திரியில் ஒரு பிரசவ விடுதியை அமைக்க 150ஆயிரம்ரூபாவையும் டாக்டர்களுக்கான விடுதியமைக்க 80 ஆயிரம் ரூபாவையும்செலவுசெய்யத் தீர்மானித்துள்ளேன்.''

மேற்கண்டவாறு நேற்று மாலை சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் திரு.எம்.டி.எச். ஜெயவர்த்தன பேசுகையில் தெரிவித்தார். சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் புதிய பல் சிகிச்சை நிலையத்தை அமைச்சர் திறந்து வைக்க அவரின் உதவி நிரந்தரக் காரியதரிசியான திரு. துரைசிங்கம் முதற் சிகிச்சை பெற்றார். அமைச்சர் ஊர்வலமாக வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட போது வழிநெடுகிலும் கல்லூரி மாணவ மாணவிகள் அணிவகுத்து நின்றார்கள். சாவகச்சேரி வைத்தியசாலை அதிபரும், டாக்டர்களும். தாதிகளும் அமைச்சர்களுக்கு மலர்மாலை, சந்தனம் ஆகியன இட்டு வரவேற்றார்கள்.

ஆஸ்பத்திரியின்ஒவ்வொர் வார்ட்டுகளையும் பார்வையிட்ட அமைச்சர் அங்குள்ள தாதிகள் விடுதி மிகச் சிறியதாக விருப்பதால் காச நோயாளர் வார்ட்டிலுள்ள நான்கு பேரையும் தாதிகள் விடுதிக்கு மாற்றி. தற்போதுள்ள காசநோயாளர் வார்ட்டை தாதிகள் விடுதியாக மாற்றித்தருவதாகவும் தாதிகள் ''மேற்றனிடம்'. தெரிவித்தார். சாவகச்சேரி ஆஸ்பத்திரி குழாய் நீர் வினியோகம் சம்பந்தமாகவும் தாம் நடவடிக்கைகள் எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கைதடி நாவற்குழியில் கிளை ஆஸ்பத்திரியைத் திறந்துவைத்துப் பேசுகையில் அமைச்சர் குறிப்பிட்டதாவது- தற்போதைய தேசிய அரசாங்கத்திற்கு முன்னிருந்த அரசாங்கத்தின் எந்த மந்திரியும் முன்னர் யாழ்ப்பாணத்திற்கு வரமுடியாத நிலையிலிருந்தார்கள், ஆனால்நான் இப்போது மூன்றுவது தடவையாக வந்துள்ளேன். மீண்டும் அடுத்த மாதம் 27ந்திகதிகைதடியில் ஆயுர்வேத வைத்தியசாலைக்கான அத்திவாரக்கல் நாட்ட வரவுள்ளேன். தமிழ் மக்களின் வளர்ச்சியில் நாம் அதிக அக்கறை காட்டுவதாலேயே இங்கு அடிக்கடி வர வேண்டியுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ் மக்களின் ஆதரவு நிறையத் தேவையாக இருக்கின்றது. இதற்கு தமிழ்மக்கள் அனைவரும் சுகதேகிகளாக இருக்கவேண்டும்.''

சாவகச்சேரிஎம். பி. திரு. நவரெத்தினம் உட்பட இன்னும் பலர் பேசினார்கள்.

(ந. நி)

---

**புதிய ஆயுதங்கள் ரஷ்யா அளிக்கும்**

போரில் ஐ. அ. குடியரசு இழந்த விமானங்கள், ஆயுதங்களுக்குப் பதிலாகப் புதிய விமானங்கள், ஆயுதங்கள் அளிக்க சோவியத் யூனியன் ஒப்புக்கொண்டுள்ளதாக கெய்ரோவிலிருந்து வெளியான ஊர்ஜிதமற்ற செய்தி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

**டிட்டோ செய்தி**

நாஸருக்கு அனுப்பியுள்ள தந்தியொன்றில், அரபுநாடுகளின் நியாயமான போராட்டத்தைத் தலைமை தாங்கி வெற்றிகரமாக நடத்துவாரெனத்தாம்நம்புவதாக யுகோஸ்லேவியா ஜனாதிபதி டிட்டோ கூறியுள்ளார்.

**அரபு உச்சி மகாநாடு**

ஐ. அ. கு. ஜனாதிபதி நாஸரும், சூடான் ஜனாதிபதியும் சந்தித்து, அரபு உச்சி மகாநாட்டின் விபரங்கள் பற்றி விவாதித்தனர். இம்மகாநாடு காஷ்மீரில் நடைபெறலாமெனத் தெரிகிறது.

**ரஷ்ய நிலைக்கு விளக்கம்**

மேற்கு ஆசியப் போரில் சோவியத் யூனியன் நேரடியாகத் தலையிடாததற்குக் காரணம், அதனால் விளைந்திருக்கக் கூடிய மூன்றாவது உலகப் போரைத் தவிர்க்கும் நோக்கத்துடனேயே என்று சூடானிலுள்ளசோவியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

---

**மாவிட்டபுரம் குருக்கள்** கூறுகிறார்கள்:
இறைவன் திருமேனியை
**சந்தனக்காப்பிட்டு**
அலங்கரிக்கவும் பின் பிரசாதமாக
உபயோகிக்கவும் உகந்தது
உடன் அரைத்தெடுத்த சந்தனமாகும்
அத்தகைய சுத்தமான
**பச்சை சந்தனம்**
யாழ்ப்பாணம் 73, மின்சார நிலைய வீதியிலுள்ள
**சுந்தரம் பிறதர்ஸ்**
ஸ்தாபனத்தில்
எப்போதும் வாங்கக்கூடியதாக ஒழுங்குசெய்திருப்பது
மிகவும் போற்றுதற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வறுமையில் ஆழ்ந்து கிடக்கும் மக்களுக்கு உணவுப் பொருள்கள் தான் கண்கண்ட தெய்வம். அதை வழிபட விவசாயமே சிறந்தமார்க்கம்.

[—மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு வைகாசி மீ 30உ (13-6-67)

## இலங்கையும் இஸ்ரேலும்

தலைப்பைப் பார்த்தவுடனேயே இலங்கைக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நெருங்கிய நட்புறவு இருப்பதாக அல்லது தீராத, தீரமுடியாத பகை இருக்கிறதாக நினைத்துவிடாதீர்கள். இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் நடந்து ஓய்ந்திருக்கிற யுத்தத்தில் இலங்கை இஸ்ரேலை ஆதரித்தது அல்லது எதிர்த்தது என்றும் உங்கள் மனப்போக்கின்படி நினைத்துக்கொள்ளாதீர்கள். அரபு நாடுகளுடன் இஸ்ரேல் யுத்தத்துக்குச் சென்றது சரியா, பிடித்தஇடங்களை விட்டுவிட மாட்டோம் என்று இஸ்ரேலியர்கள் பிடிவாதம் பிடித்துக்கொண்டிருப்பது சரியா என்பதைப் பற்றியோ இஸ்ரேல் சம்பந்தமாக இலங்கை என்னவிதமான கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்பதையோ இன்று இங்கு ஆராய்வது நமது நோக்கமல்ல,

7,993 சதுரமைல் விஸ்தீரணமுடைய பிரதேசமான இஸ்ரேலில் சுமார் முப்பதுலட்சம் யூத இன மக்களே வாழ்கிறார்கள். இந்த இஸ்ரேலைச் சூழ அரபுநாடுகள் இருக்கின்றன. இஸ்ரேலின் ஜனத்தொகையைவிட அரபு மக்களின் எண்ணிக்கை இருபது மடங்குக்கும் அதிகமாகும். அரபு நாடுகளின் படைபலமும் இஸ்ரேலைவிட பலமடங்கு அதிகம். எனினும் பதின்மூன்று அரபுநாடுகளில் தன்னுடன் போர் புரிந்து ஏழு அரபுநாடுகளையும் போரில் தோல்விகாணச் செய்து இஸ்ரேல் தலை நிமிர்ந்து நிற்கிறது. இதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் இஸ்ரேலுக்குப் பின்னணியில்நின்று உதவி அளித்ததே காரணம் என்று கூறப்படலாம். அரபுநாடுகளுக்கு குறிப்பாக ஐக்கியஅரபுக்குடியரசுக்கும் சிரியாவுக்கும் சோவியத்யூனியன் உதவி உள்ளதென்பதை அரபு நாடுகளே மறுக்க மாட்டா.

நவீன ஆயுதங்களும் படைபலமும், பக்கபலமும் இருந்தால் மட்டும் போதாது. தேசப்பற்றும் தேசிய ஒருமைப்பாடும் இருந்தால் எதிலும் வெற்றி கிட்டும் என்பதைத்தான் இஸ்ரேலின் வெற்றி எடுத்துக்காட்டியிருக்கிறது. இந்த விஷயத்தில்தான் இஸ்ரேலுடன் இலங்கை தன்னையும் ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

இலங்கைசுதந்திரமடைந்தது 1948-ம் ஆண்டில். இஸ்ரேல் உருவானதும் 1948-ம் ஆண்டில்தான். இஸ்ரேலின் இன்றைய ஜனத்தொகை சுமார் முப்பது லட்சம். அதாவது கிட்டத்தட்ட இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை அளவு என்றுசொல்லலாம். இஸ்ரேல் 7993 சதுரமைல் விஸ்தீரணமுடையது. அதாவது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைவிடசற்றுப் பெரிது. இலங்கையின் வடக்கு கிழக்குமாகாணங்கள் 7269 சதுரமைல் விஸ்தீரணமுடையது. இலங்கையின் விஸ்தீரணம் 25,332 சதுரமைல்உடையது. இலங்கையின் ஜனத்தொகை ஒருகோடியே பத்துலட்சத்துக்கு மதிகமாகும். இஸ்ரேலைப்போல் இலங்கைக்கு எல்லைகளில் ஆக்கிரமிப்பு ஆபத்துஎதுவுமில்லை. எனினும் இஸ்ரேலுக்கு ஏற்படுவது போன்று இலங்கைக்கும் எல்லை ஆபத்துக்களிருந்தால் இலங்கையென ஒன்று உலகப்படத்தில் இருக்கமுடியுமா? இலங்கையும் இதேநிலையிலிருந்தால் இஸ்ரேலைப்போல் நாட்டைக்காக்கத் தயாராக இருக்குமென்று கூறலாம். ஆனால் எதைக் கொண்டு இப்படிக் கூற முடியும்?

இலங்கை சுதந்திரமடைந்து இருபதாண்டுகளாகியும் எந்தவித முன்னேற்றத்தையும் காணோம். இஸ்ரேல் உருவாகி இருபதாண்டுகளேயாகிறது. இதற்குள் அது அடைந்துள்ள முன்னேற்றத்தைப்பற்றிச் சொல்லத்தேவையில்லை.

பதவிப்போட்டியும்அதிகார ஆசையும் இலங்கையில் முன்னிற்கிறது. குறுகிய தேசியவாதம் நாட்டைப்பின்தங்கச்செய்திருக்கிறது. இஸ்ரேலைப்போலல்லாவிடினும் ஓரளவாவது நாம் [illegible] வேண்டுமானால் இஸ்ரேலியர்களைப்போன்ற [illegible]பிமானமும் தேசிய ஐககியமும் வேண்டும்.

# "ஒரேகுடும்பமாகவாழ வேண்டும் சேக்கிழார் கூறுவதும் இதுவே"

## யாழ்ப்பாணம் வந்துள்ள தம்பிரான் சுவாமிகள் செய்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

''நாம் அனைவரும் ஒரே குடும்பத்தவர்கள். எம்மத்தியில் எந்தப் பிளவுகள் ஏற்பட்டாலும் நாம் அனைவரும் ஒரு குடும்பத்தவர் போல் பாகுபாடின்றி வாழ வேண்டும் என்பதையே சேக்கிழார் பெருமான் கூறியுள்ளதை நாம் இன்றைய வேளையில் நினைவு கொள்ள வேண்டியது மிகமிக அவசியமாகும்.''

மேற்கண்டவாறு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த தருமை ஆதீனகர்த்த வித்துவான் தவத்திரு சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் விடுத்த செய்தியில் குறிப்பிட்டார். அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நேற்று ஆரம்பமான இரண்டாம் சேக்கிழார் விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டே சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் இங்கு அழைக்கப்பட்டுள்ளார்.

விமான மூலம் பலாலி விமானநிலையத்தை வந்தடைந்த சுவாமிகளை சேக்கிழார் மன்றத் தலைவர் திரு. ம. ஸ்ரீகாந்தா, ஞானசம்பந்தர் ஆதீனக்கிளைத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் உட்பட அநேக பிரமுகர்கள் மாலையும், சந்தனமுமிட்டு வரவேற்றார்கள். விமான நிலையத்தில் சுவாமிகள், சுகாதாரஅமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்வன, வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பின்னர் அவர்கள் சுவாமியை வணங்கினார்கள். மேளவாத்தியங்களுடனும், குடை, கொடி, ஆலவட்டங்களுடனும் சுவாமிகள் அழைத்துவரப்பட்டார்கள்.

தவத்திரு சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் சேக்கிழார் விழாவை முன்னிட்டு விடுத்த செய்தியில் மேலும் குறிப்பிட்டதாவது:

யாழ்ப்பாணத்தில் நான் தற்போது இருக்கின்றபோதிலும் தமிழகத்தில் இருப்பது போலவே நான் உணருகின்றேன். இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்தின் நகர அமைப்பும், மனோநிலையும் தமிழகத்தைப் போன்று இருப்பதுவே வாழ்க்கையில் எம் மத்தியில் பிளவு இருக்கலாம். ஆனால் எமக்குள் ஒரே இணைப்பு அவசியமாகும். அதற்கு ஒரேவழி சமயம் தான். இதையே சேக்கிழார் பெருமானும் வலியுறுத்தியுள்ளார். காசி, இராமேஸ்வரம் என்றும், கன்னியாகுமாரி இமயம் என்றும், வேங்கடம், குமரி என்றும் இணைச் சொற்களைக் குறிப்பிடுவது இந்த ஒற்றுமையை வலியுறுத்தியேயாகும். இதனைசேக்கிழார் 800 ஆண்டுகளுக்கு முன்னமே கூறியுள்ளார். அமெரிக்கா, ரஷ்யா இந்தியா என்றும் தமிழ் சிங்களம் என்றும் எம் மத்தியில் இன மத பாகுபாடு இருக்கலாம். ஆதலால் நாம் வேற்றுமையாகவோ சண்டை மனப்பான்மையாகவோ இருக்கக் கூடாது. உதாரணமாக இஸ்ரேல் சண்டை கூட ஓரளவுக்கு எம்மைப் பாதிக்கும் இதனால் எமக்கு அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டால் அது எமக்கு கஷ்டமாகும், இந்த வேளையில் சேக்கிழார் விழாவை எடுக்கும் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தை நான் பாராட்டுகின்றேன். [ந. நி]

## பிரயாணிகள் கஷ்டம்

சுழிபுரம், திங்.

கடந்த மூன்று தினங்களாக சுழிபுரம் பஸ் சேவை படு மோசமான நிலைமையடைந்துள்ளது. காலையிலும் பிற்பகலும் பிரயாணிகள் பல மணித்தியாலம் பஸ்ஸுக்காக வீதியில் தவம் கிடக்கவேண்டியுள்ளது. சில வேளையில் பல பஸ்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்கின்றன.

## மாணவர் சிரமதானம்

சுழிபுரம், திங்.

வழக்கம்பரை அம்மன் கோவில் நான்கு வீதிகளையும் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மாணவ மாணவிகள் சிரமதான முறையில் சுத்தம் செய்தனர். சுமார் இருநூறு [illegible] இவ் வேலை இரண்டு தினங்கள் நடைபெற்றன.

## தந்தி அனுப்பியும் பயனில்லை

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாயிலிருந்து சு. கந்தையா என்பவரால் புதூரிலுள்ள இ. குமரையா என்பவருக்கு அனுப்பிய அவசரத் தந்தியொன்று புளியங்குளம் தபால்நிலையத்திலிருந்து தந்தி கொண்டுசெல்லும் ஊழியர் இல்லாமையால் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டு மூன்று நாட்களின் பின்னரே உரியவரைச் சென்றடைந்துள்ளது. இதனால் தந்தி அனுப்பியவருக்குச் சுமார் 500 ரூபாவரை நஷ்டமேற்பட்டுள்ளதாம்.

## 2வது பரிசு

உடுப்பிட்டி, திங்கள்

சென்ற வருடம் ஐக்கிய நாடுகள் சபையின் 100வது ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்பட்ட அகிலஇலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான கட்டுரைப் போட்டியில் புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலையில் ஜி. சி. ஈ. [சாதாரண] வகுப்பில் பயிலும் பாலகிருஷ்ணன் வயிரவநாதன் என்னும் மாணவர் இரண்டாவது பரிசைப் பெற்றுள்ளார்.

## வேலைக்குத் திரும்பினர்

நாவலப்பிட்டி, திங்கள்

ஒருமாத காலத்துக்குப் பின் 450 தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். வேலைநீக்கம் செய்யப்பட்ட 54 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை பெற்றுக் கொடுக்க பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

கொத்மலையைச் சேர்ந்த அறங்கலைத் தோட்டத்தில் 54 தொழிலாளர்களைத் தோட்ட நிர்வாகம் திடீர் வேலைநீக்கம் செய்ததைத் தொடர்ந்து அத்தோட்டத்தைச்சேர்ந்தஇ. தொ. கா., ஜ.தொ.கா. தொழிற் சங்கத் தொழிலாளர்களான 450பேர் வேலைநிறுத்தம் செய்துவந்தனர். கடந்தஒரு மாதகாலமாகப் பேச்சுவார்த்தைகள் நடந்துவந்தது. தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையில்சேர்க்கும்படி ஜ.தொ.கா. பிரதிநிதிகள் தோட்ட நிர்வாகத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடாத்துகின்றனர்.

## நாட்டிலும் நகரிலும்

நேற்றிரவு என் கடைக்குட்டியைக்கூட்டிக்கொண்டு ஒரு சினிமா பார்க்கப் போயிருந்தேன். என்ன படம் என்று எனக்குஞாபகமில்லை. ஏதோ ஒரு படம், அவனுடைய உபத்திரவம் தாங்க முடியாமல் போனேன்.

அம்மணி ஒருத்தி திரையில் தோன்றினாள். அவள் கதாநாயகியாய்த்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்டேன். ஒரு 'குளோஸ்-அப்' காட்டினார்கள். அப்பப்பா! அதை என்னவென்று வர்ணிப்பது.

சிறு வயதிலிருந்தே சீதை, தமயந்தி, ரம்பை, திலோத்தமை, ஊர்வசி, மாதவி ஆதியாம் மாது சிரோன்மணிகளின் அங்கலட்சணங்களை தமிழ் இலக்கிய, காவியங்களின்மூலம் கவினுறக் கற்ற எமது உள்ளம், கலிகாலம் 1967-ம் ஆண்டில் பெண்களின் அங்கலட்சணங்கள் இத்தகைய பெரும் மாற்றம் அடைந்ததைக் கண்டு திகைப்பும் வருத்தமும் கொண்டது.

துடியிடை, மின்னல் கொடி, மூங்கில் தளிர், வாழைத்தண்டு-என்ற வர்ணனையெல்லாம் புராண இதிகாசங்களில்தானா?

'அப்பா! இந்தபொம்பிளை குஸ்தி போட வந்திருக்கிறாவா?' என்று என் கடைக்குட்டி கேட்டபோது அவன் என்னுடைய எண்ணங்களை பிரதிபலிக்கிறான் என்பது தெரிந்தது.

அந்த 'குளோஸ்அப்' இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்தது. கதாநாயகியின் ஒரு தோளும் ஒரு புஜமும் திரையில் பாதிப்பகுதியை அடைத்துக்கொண்டு பயங்கரமாக விளங்கின.

மெள்ள அந்த அம்மணி எழுந்தாள். திரை முற்றாக மறைந்துவிட்டது.

கம்பனும் காளிதாசனும் இளங்கோவும் வியாசனும் கண்ட பெண்ணுலகம் எங்கே மறைந்துவிட்டது? இன்றைய மங்கையரின் அழகுநிலை இதுதானா? என்றெல்லாம் மனம் நொந்தது!

அஜந்தா சித்திரங்களை நினைத்தேன், அற்புதமான சிகிரியா கல்லோவியங்களை நினைத்தேன். பெண்ணினத்தின் அங்க லட்சணங்களை அணுஅணுவாக வியந்து விவரித்த எண்ணுதற்கரிய கலைஞன்களை நினைத்தேன். அவர்களுடைய கற்பனைகள் எங்கே, லட்சியங்கள் எங்கே! மதுரையம்பதியின் மாண்புமிக்க சிற்பங்கள் எங்கே? மாமல்லபுரத்தின் உயிரோவியங்கள் எங்கே?

தமிழ்க் கவிஞர்களும் சைத்திரீகர்களும் பெண்மையை எப்படியெல்லாம் கற்பித்தார்கள். என்னென்ன மாதிரியெல்லாம் பெண்ணினத்தின் அவயவங்களை வர்ணித்தார். அழகுத்தெய்வத்தின் எழிற்கோலங்கள் அனைத்தையும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் அங்கஅசைவுகளில் கண்டு களித்தார்கள்.

இன்று நாம் காண்பதென்ன?

சினிமா ஓர் அழகுக்கலை. அதில் நாம் எதிர்பார்ப்பது அழகின் உச்ச வரம்பு, அதில் வரும் ஆண்களையும் பெண்களையும் நமது இளமட்டங்கள் மனித உருவத்தின் சிகரங்களாக நினைத்து அவர்களில் அன்பும் ஈடுபாடும் கொள்ளுகிறார்கள். சிலருக்கு அவர்களே தெய்வம் என்றும் ஆகிவிடுகிறது.

தமிழ் சினிமா நடிக நடிகையர்கள் தொந்தி பெருத்து, வண்டி கொழுத்து, அந்தசந்தமில்லாமல் அங்கங்கள் எல்லாம் புடைத்து விரிந்து, சதை முட்டி வழிகின்ற கோலத்தில் சினிமா

[4-ம் கலம்பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

திரையில் காட்சியளிக்கின்றபோது நமது இளம் சந்ததியார்கள் அவர்களையே லட்சியத் தெய்வங்களாகப் போற்றிப் புகழப் போகின்றார்களே.

மேனாட்டு சினிமாக் கதைகளையும் படப்பிடிப்பு முறைகளையும், டெக்னிக்குகளையும், ஏன் சங்கீதத்தையும் கூடப் பின்பற்றும் தமிழ்ப் பட முதலாளிகளும் டைரக்டர்களும், நடிக, நடிகையர்களும் மேனாட்டு சினிமாக்களில் வரும் கதாநாயக, கதாநாயகிகளின் அங்கலட்சணங்களையும் பின்பற்றக் கூடாதா?

- வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிட்டவந்தால் வெட்டுவேன் என்று 1-ம் எதிரி கூறினர்"

## கோப்பாய் கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், செவ். ''வெட்டடா தம்பி நான் சிலவழிக்கிறேன்'' என்று 1ம் எதிரி சின்னத்தம்பி 2ம் எதிரியிடம் கூறினர். கையில் இருக்கிறது என்ன என்று தெரியுமா என்றும் 3ம் எதிரி சொன்னர். அச்சமயம் என் தகப்பனர் வந்து என்னைக் கூட்டிச் சென்றார்.''

கோப்பாய்க் கொலைவழக்கில் சாட்சியமளித்த கந்தன் முருகுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு நேற்றுக்காலை மூன்ருவது தினமாக வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் திரு. வி. தென்னகோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இறந்தவரின் சகோதரரான முருகுப்பிள்ளை சாட்சியத்தில் கூறியதாவது: அன்று காலை சீவலுக்காக நான் புறப்பட்டேன். ரேட்டில் எதிரிகள் என்னை மறித்தார்கள். அவர்கள் ஆயுதங்களுடன் நின்றனர். 1ம் 2ம் 4ம் எதிரிகள் கத்தியும், 3ம் எதிரி பொல்லும்வைத்திருந்தனர். ''வா தம்பி'' என்று 1ம் எதிரி என்னைக் கூப்பிட்டு போக விடமாட்டேன் என்ருர். ''ஏன் என்னை மறிக்கிறீர்கள்'' என்று நான் கேட்டேன். கிட்ட வந்தால் வெட்டுவேன் என்று 1ம் எதிரி கூறினர்.

தகப்பனர் வந்து என்னைக் கூட்டிச் சென்ருர். நான் தோட்டத்திற்குப் போய் விட்டுத் திரும்பிவரும் போது சம்பவம் நடந்த இடத்தில் எவருமில்லை. இறந்தவருடைய மனைவி குளறிக்கொண்டிருந்தார். நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது தருமன் முடிந்துபோனுன் என்று கூறினர்கள். என் தகப்பனர் அங்கு அழுதுகொண்டு நின்ருர். நான் அவருடன் கதைக்கவில்லை. நான் என் சகோதரனின் சடலத்தைக் காணவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# 'டிக்கட் விற்பனையிலேயே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறதே''

வெள்ளவத்தை. சனி நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றுபவர்கள் தமக்குப் பெருந்தொகையான பணநஷ்டம் ஏற்படலாகாது என்று ஏங்குவது இயல்பே. நடிப்பிலும் அரங்கமைப்பிலும் பிற கலைநுணுக்கங்களிலும் தமது திறமையையும் கவனத்தையுஞ் செலுத்தவேண்டியவர்கள் 'டிக்கட்' விற்பதிலேயே அதிக சிரத்தை எடுக்க வேண்டியிருப்பது வருந்தத்தக்க நிலைமையாகும். ஆயினும் அதுவே இன்றைய உண்மை நிலைமை. எனவே தாமாக விரும்பிச் சென்று நாடகங்களைப் பார்த்துச் சுவைக்கும் இரசிகர்தொகையை அதிகப்படுத்துவது இன்றியமையாததாகும். இதற்குக் கலையம்சம் மிக்க நாடகங்கள் அரங்கேற்றப்படுவது அத்தியாவசியம்'' என பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற 'தேன்" என்னும் சமூக நாடக அரங்கேற்றத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கலாநிதி க, கைலாசபதி கூறினர்.

தயாரிப்பாளர் திரு. க. கதிர்காமத்தம்பி, டைரக்டர் திரு. எஸ். அருமைநாயகம் ஆகியோரும் பேசினர்.

## ஏற்பு வலிக்கு குழந்தை பலி

பருத்தித்துறை, திங். சாவகச்சேரி நகரசபையில் நகரசுத்தித் தொழிலாளியான வீரன் இராமனின் மனைவி இலட்சுமியின் இரட்டைக் குழந்தைகளில் ஒன்றுக்கு வலியேற்பட்டதும் இலசுமி தையல் ஊசியை நெருப்பில் காய்ச்சி குழந்தைக்கு நெற்றியிலும் நெஞ்சிலும் கைகளிலும் முதுகிலும் முழங்கால் பொருத்துகளிலும் சுட்டாராம். பின்னரும் நோய் அதிகரிப்பதைக் கண்ட தாய் குழந்தையை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தாராம். குழந்தை அங்கு இறந்துவிட்டது. வைத்திய அதிகாரி பொலிசுக்குத் தகவல் கொடுத்த தன்பேரில் பருத்தித்துறை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு.ஆர்.எஸ். இராமநாதன் மரணவிசாரணை நடத்தினர். வைத்திய அதிகாரி சாட்சியமளிக்கையில் அக்குழந்தை ஏற்புவலியால் இறந்ததெனக் கூறியதன்பேரில் இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பாராட்டு உபசாரம்

யாழ்ப்பாணம், செவ். சித்தாந்த கலைச் செல்வர் திரு. க. வச்சிரவேலு முதலியார் சிவஞானபோத விரிவுரைகள் ஆற்றியமையைப் பாராட்டுமுகமாக சைவபரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் நாளை காலை தருமபுர ஆதீன இளவரசு தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் ஒரு பாராட்டுபசாரம் நடைபெறவிருக்கிறது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சிவநெறிக்காவலர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை, வடமாநில கல்வியதிபதி திருமதி இரத்தின நவரத்தினம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். தலைமை தாங்கும் தம்பிரான் சுவாமிகள் காலை 7-30 மணிக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். வச்சிரவேலு முதலியார் இம்மாதம் 23-ம் திகதி தாயகம் திரும்புவாரென்பது குறிப்பிடத்தக்கது. [ந. நி.]

## தேரோவிடம் தூதுக் குழு செல்லும

புன்னலைக்கட்டுவன், திங். அரசாங்க அமைச்சர் திரு ஜெ. ஆர், ஜெயவர்த்தனவின் ஆசியுடனும் சம்பந்தப்பட்ட எம். பிக்களின்வாழ்த்துடனும் புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி பூநகரி ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு, மல்வத்த மகாநாயக்கதேரோவால் பௌத்தமதக் கிரியைகளுடன் தொடக்கி வைக்கப்பட்ட தமிழ்ப்பௌத்த பாடசாலைகள் இதுவரை அங்கீகரிக்கப்படாதிருப்பது பற்றி, முறையிட்டு ஆவன செய்வதற்காக ஒரு தூதுக்குழு மல்வத்த மகாநாயக தேரோவிடமும், கல்வியமைச்சரிடமும் கொழும்புக்குச் செல்லவிருக்கிறது, இக்குழுவில் பிரதான சிறுபான்மைத் தமிழ்த்தலைவர் இடம் பெறுவரெனவும், பலமாத காலமாக இப்பாடசாலைகள் பெற்றேரின் உதவியாலும் சம்பளமின்றிக் கஷ்டப்படும் ஆசிரிய ஆசிரியைகளின் ஒத்துழைப்பாலும் இயங்கி வருகின்றன என தூதுக்குழு வலியுறுத்துமெனத் [illegible] றது.

## பெற்றேர் ஆசிரியர் சங்கம

ஊர்காவற்றுறை, திங், பருத்தியடைப்பு கதிரேசானந்த வித்தியாசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கம் வித்தியாசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு-க. செல்வராசா தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பாடசாலை வளர்ச்சிக்குப் பெற்றேரும் ஆசிரியர்களும் ஒத்துழைத்துப் பணியாற்ற வேண்டுமென்றும், ஒருவரை ஒருவர் நன்ருக விளங்கி நடக்க வேண்டுமென்றும் பிள்ளைகளின் குறைகளை ஆசிரியர்களுடன் கலந்துரையாடி நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் தலைவர் கூறினர்.

காரியதரிசியாக திரு.மு. சீவரத்தினமும், தனதிகாரியாக திரு. ஐ. சோமசுந்தரமும், உபகாரியதரிசியாக திரு. சி. ச. முத்துலிங்கமும் தெரியப்பட்டனர். இன்னும் 7பேர் நிர்வாகசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## தொழிற்சங்கம்

யாழ்ப்பாணம், செவ். பரந்தன் ரசாயன தொழிற்சாலை ஊழியர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய ஊழியர் சங்கத்தின் ஆதரவுடன் ஒரு தொழிற்சங்கத்தை நிறுவியுள்ளனர். தேசிய ஊழியர் சங்க மாவட்டப் பிரதிநிதி திரு. த. குணரத்தினம் ஊடாக தமது தொழிற்சாலை அதிபரிடம் தமது பிரச்னைகள் பற்றி நேரில்பேச இவர்கள்ஒழுங்கு செய்துள்ளனர்.

சங்க நிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: ச. மயில்வாகனம், உபதலைவர்கள்: ஆ. வைத்திலிங்கம், க. ஞானதுரை, க. இரத்தினம், பொதுச்செயலாளர்: எஸ். அம்பலவாணர், உபசெயலாளர்: ரி. கனகசபாபதி, தனதிகாரி: கே. மயில்வாகனம், அமைப்பாளர்: ஸி. வாமதேவா. ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

### புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி, சனி நாச்சிக்குடா முகியிதீன் பள்ளிவாசல் சங்கப்பொதுக் கூட்டம் பள்ளிவாசல் முன்றலில் நடைபெற்ற போது புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. அப்தில் ஜப்பார், உப தலைவர்: திரு. இ. அசனுலெப்பை, காரியதரிசி: திரு.மு. அப்துல் லத்தீப் உபகாரியதரிசி: திரு. வா. அப்துல் மஜித், பொருளாளர்: திரு.மு. யூ. பாரூக் பத்துப் பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சுகாதார விழா

சங்கானை, திங். சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் சுகாதார விழா கொண்டாடப் பட்டது. தலைமை ஆசிரியர் திரு. க. மயில்வாகனம் தலைமை வகித்தார். திரு. ச. இராமலிங்கம், திரு. ந. நடேசர், சுகாதார பரிசோதகர் திரு. ஏ. ஏ. ஜோன் ஆகியோர் உரையாற்றினர்.

## அந்தோனியார் நவநாள்

பண்டத்தரிப்பு, செவ். பாசையூர், பண்டத்தரிப்பு, மாதகல், பெரியவிழான், ஊறணி ஆகிய இடங்களில் புனித அந்தோனியார் நவ நாட்கள் நடைபெற்று வருகின்றன. இன்று திருநாள் [illegible] திருச் சொரூப சுற்றுப் [illegible] திருநாள் முடிவடையும்.

# மற்றெரு இளம்பெண் மர்ம மரணம்

கொழும்பு, திங்கள் காணுமல்போன ஓர்இளம் பெண் சில தினங்களுக்குப் பின் காரீயக் கிடங்கு ஒன்றில் பிரேதமாகக் கிடக்கக் காணப்பட்டார்.

எல்பிட்டியாவிலிருந்து கால் மைல் தூரத்தில் சீதின் என்பவரின் மகளான 22 வயது எமிலின்நோனவின் சடலம் அழுகிய நிலையில் காரீயக் கிடங்கு ஒன்றில் காணப்பட்டது. எமிலின் நோனவின் மரணம்பற்றி நடந்த விசாரணையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேதபரிசோதனையிலும் மரணத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப் படாததால் சடலத்தின் உள்ளுறுப்புக்கள் ஆசாங்க பரிசோதகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மூன்று தினங்களுக்கு முன்னர் தமது மகள் விருந்தையிலிருந்ததாகவும் சிறிது நேரத்தின்பின் அவர் திடீரெனக் காணுமல் போனதாகவும் இறந்த பெண்ணின் தகப்பனர் மரணவிசாரணையின்போது தெரிவித்தார்.

இப்பெண்ணின் மர்ம மரணம்பற்றிப் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

ஃ

பெண் மரணம் சம்பந்தமாக

# தேடப்பட்ட டாக்டர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்

கொழும்பு. ஞாயிறு கால்கள் முறிக்கப்பட்ட நிலையில் அட்டைப்பெட்டிக்குள் திணிக்கப்பட்டிருந்த இளம் பெண்ணின் சடலத்தை அவரது தாயும்சகோதரரும் அடையாளம் கண்டு கொண்டனர்.

25வயதான அடின் சிலாவதி என்ற இப்பெண்ணின் சடலம் ஜாஎலையில் வீதியின் அருகே கண்டுபிடிக்கப்பட்டது. இது சம்பந்தமாகப் பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

இப்பெண்ணின் மரணம் சம்பந்தமாக பொலிசாரால்தேடப்பட்டுவந்தவெலிசறையை சேர்ந்த டாக்டர் சி.எஸ. ரீட்என்பவர் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார் மற்றெரு சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பின்னர்தான் சடலம் பெட்டிக்குள் திணிக்கப்பட்டு இருக்கிறது என்று பிரேதபரிசோதனை செய்த டாக்டர் தெரிவித்ததையடுத்து பொலிஸார் இதுசம்பந்தமாக பலரை விசாரணை செய்துவருகின்றனர்,

## வேலை யிழந்தோர் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய் சிங்களம் மட்டும் சட்டத்தால் வேலையிழந்தோரின் பொதுக்கூட்டம் ஒன்று இம்மாதம் 15-ந் திகதி கோண்டாவில் மேற்கில் நடைபெறும்.

திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், மு. மகாலிங்கம், எஸ். கே. முருகையா, சி. வன்னியசிங்கம் வி. எம். சுந்தரம், கே. அருணுசலம் முதலியோரும் வேறு பலரும் பேசுவார்கள்.

## நவாலி விளையாட்டுக் கழகம

உடுவில், திங்கள் 'இளைஞர்களிடையேகட்டுப்பாட்டையும் தேகாரோக்கியத்தையும், வெற்றி தோல்வியைச் சமமாக ஏக்கும் தன்மையையும், ஜனநாயக ரீதியில் பிரச்னையைத் தீர்க்கும் முறையையும் விளையாட்டுகள் கற்பிக்கின்றன. இதனை இலக்காகக் கொண்டுதான் தேசிய அரசாங்கம் கிராமங்கள் தோறும்விளையாட்டுக் கழகங்களை நிறுவவும், கிராம மக்களிடையே மறைந்திருக்கும் விளையாட்டு வீரர்களை உலக அரங்குக்குக் கொண்டு வரவும் இதுபோன்ற கழகங்களைநிறுவ ஊக்குவிக்கிறது.' என்று வலி.மேற்கு விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு நடராசா நவாலி மணிமண்டபத்தில் நவாலி விளையாட்டுக் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும்பொழுது குறிப்பிட்டார்.

உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு- தலைவர்- திரு. இராசதுரை. செயலாளர்- திரு.என், குகதாசன், உபச்செயலாளர்- திரு. என். பரமேஸ்வரன். பொருளாளர்- திரு.எம். புவனேந்திரன். உதவிப்பொருளாளர்- திரு. கே. சிறீதரன். ஏழுபேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## விளையாட்டுப்போட்டி

உடுப்பிட்டி, ஞாயிறு கரணவாய் தெற்குமூத்தவிநாயகர்சனசமூகநிலையத்தின் சிறுவர், முன்னேற்றக்கழகத்தின் ஆண்டுவிழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளும் ஆசிரியர் திரு எம். கந்தப்பு தலைமையில் நடைபெற்றன. இவ்விழாவில் திரு.இ. சின்னத்தம்பி உட்பட வேறுபலரும் பேசினர்.

விளையாட்டுப் போட்டியில் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு

பாலர் பிரிவு ஸி. ஆனந்த கிருஷ்ணமூர்த்தி, கீழ்ப் பிரிவு சி. மகாலிங்கசிவம், இ. புஷ்பராசா, மத்தியபிரிவு, ஸி, தங்கவேல், இ. குமார வேலாயுதம் மேற்பிரிவு த. சிவகுரு.

மஞ்சள் இல்லம் முதலிடத்தை சுவீகரித்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "1-ம் எதிரி கட்டிப்பிடிக்க 2-ம் எதிரி குத்தினர்"

### மண்டைதீவு கொலை வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

2-ம் எதிரி தகாத வார்த்தைகளால் பேசி சாம்பசிவமூர்த்தியை ஓங்கிக் குத்த அவர் தடுத்தார். 1-ம் எதிரி வந்து இறந்தவரைக் கட்டிப்பிடித்தார். 2-ம் எதிரி குத்தினர். குத்தியபின் சாம்பசிவமூர்த்தி விழுந்தார்.

மண்டைதீவு கொலை வழக்கில் சாட்சியமளித்த இறந்தவரின் தம்பி கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. எம். ஜாமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மண்டைதீவில் சாம்பசிவமூர்த்தியை கொலைசெய்ததாக குலசிங்கநாதன், சிவபாதசுந்தரம், பாலசிங்கம், திருநாவுக்கரசு ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கனகசபாபதி மேலும் கூறியதாவது- இறந்த என் சகோதரரை ஆஸ்பத்திரிக்கு திருஞானம், மாசிலாமணி ஆகியோருடன் வானில் கொண்டுசென்றேன். ஆஸ்பத்திரியிலுள்ள பொலிஸில் முறையிட்டேன் 1-ம் 2-ம் எதிரிகளின் பெயரைப் பொலிஸாருக்குக் கூறினேன்.

மேலவிசாரணை இம்மாதம் 25-ந்திகதி தொடர்ந்து நடைபெறும்.

## கி. ச. தீர்மானம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவில் சேவையிலீடுபட்டுள்ள ஒரே ஒரு பஸ் வண்டி அடிக்கடி பழுதடைவதால் பிரயாணிகள் ஏமாற்றமும் கஷ்டமும் அடைந்து வருகிறார்கள். இந்நிலைமாறி நல்ல பஸ் சேவையை நடாத்தவேண்டுமாயின் இன்னுமொரு பஸ்வண்டியை அனுப்பிவைக்குமாறு கோருவதென்றும், நேரில்வந்து நிலையைப் பார்வையிட போக்குவரத்து மந்திரியையும், தேசிய மய சேவை மந்திரியையும் இங்கு அழைக்க வேண்டுமெனவும், நெடுந்தீவு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

[illegible] சுழிபுரம், திங்.

யாழ். மாவட்ட புற்றுநோய் தடுப்புச் சங்கத்தினர் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் சுகாதார வாரத்தையொட்டி புற்றுநோய் தடைப் பிரசாரத்தை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

## தியாகசக்திக்கு எடுத்துக்காட்டு

உடுப்பிட்டி, திங்கள்

தொழிலாளர் நலனுக்காகத் தனது உயிரை அர்ப்பணித்த தியாகி கந்தசாமி இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் தியாக சக்திக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார்.

இவ்வாறு வதிரி முற்போக்கு வாலிபர் சங்கத்தினர் நடாத்திய ஞாபகதின விழாவில் பேசுகையில் வட பிரதேச சம்மேளனத் தலைவர் டாக்டர் திரு. எஸ். எஸ். மாசிலாமணி கூறினர். இக்கூட்டத்திற்கு திரு. எஸ். கே. இராஜ் தலைமைவகித்தார். திரு. மாசிலாமணி தொடர்ந்து பேசும் பொழுது, அமரர் கந்தசாமி அரசாங்க லிகிதர் சங்க உறுப்பினராக இருந்தாலும் கூட அவர் தொழிலாளர்களில் ஒருவராகவே விளங்கினர் இலங்கையில் 1933-ம் ஆண்டு அந்நிய ஏகாதிபத்தியத்தை அகற்ற அரும்பாடுபட்டு 1959-ம் ஆண்டு காலமான தோழர் டெரன்ஸ் சில்வாவையும், அவரைத் தொடர்ந்து தொழிலாளர் நலனிற்காகத் தங்கள் உயிரை அர்ப்பணித்த அமரர்களான பொன்கந்தையா, முல்லோயாகோவிந்தன், வீராசாமி, வேலாயுதன், தர்மகுலசிங்கம் [ஜெயம்] சிற்றம்பலம் ஆகியவர்களையும் நாம் என்றும் மறக்க முடியாது, என்றும் கூறினர்

## பரமஹம்ஸர் ஜயந்தி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஸ்ரீ இராமகிருஷ்ண சபையின் ஆதரவில் நாளை ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜயந்தி கொண்டாடப்படவிருக்கிறது. வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் நாளை மாலை ஆரம்பமாகும் இவ்விழவுக்கு ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மாநந்தா தலைமைவகிப்பார். பூஜை, பஜனை முதலிய நிகழ்ச்சிகளின் பின் திரு. செ. சின்னத்தம்பி கமிழிலும், கனாநிதி ஈ. டபிள்யு. அதிகாரம் ஆங்கிலத்திலும் உரையாற்றுவர்.


# ராணி

## அழகிகளைத் தெரிவு செய்து அழகிய பரிசொன்றைப் பெறுங்கள்.

### 1 ஆம் பரிசு
சிங்கர் தையல் மெஷின்
(கபினெற் மொடல்) அல்லது
ரூ. 1000/- ரொக்கம்.



### 2 ஆம் பரிசு
ஒரு குருண்டிக் பாட்டரி ரேடியோ
அல்லது ரூ. 525/- ரொக்கம்.



### 3 ஆம் பரிசு
ஒரு ஹம்பர் பைசிக்கிள் அல்லது
ரூ. 300/- ரொக்கம்.



### 4 ஆம் பரிசு
உயமன் மண்ணெண்ணெய் அடுப்பு
மற்றும் சமையல் பாத்திரங்கள்
கொண்ட பொட்டலம் அல்லது ரூ. 185/- ரொக்கம்.



முதலாவது பரிசு முதலாவதாகக் கிடைக்கப்பெறும் துப்புரவான, சரியான விடைக்கு வழங்கப்படும். இவ்வாறே 2ஆம், 3ஆம், 4ஆம் பரிசுகள் இரண்டாவதாகவும், மூன்ருவதாகவும், நான்காவதாகவும் கிடைக்கப்பெறும் துப்புரவான, சரியான விடைகளுக்கு வழங்கப்படும்.



மேலேயுள்ள படத்தில் இலங்கையின் பண்டைய அரசிகளில் ஒருவரான பத்மாவதி குளித்துக் கொண்டிருக்கிறர். அவரைச் சூழ அவருடைய சேடிமாரும் மற்றும் பல அழகிகளும் காணப்படுகின்றனர். இவர்களுடைய முகங்கள் மறைந்திருக்கின்றன.

நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய காரியம் மிகவும் இலகுவானது. படத்தில் எத்தனை முகங்கள் உண்டு என்பதை எண்ணிப் பார்த்து, உங்கள் பதிலைக் கீழேயுள்ள பத்திரத்தில் எழுதி அந்தப் பத்திரத்தை ராணி சந்தன சோப் உறையொன்றுடன் த. பெ. 1119, கொழும்பு என்னும் விலாசத்துக்கு அனுப்ப வேண்டியதே.

மேலேயுள்ள படத்தில் . . . . . . ராணி
அழகிய முகங்கள் காணப்படுகின்றன.

பெயர்: ..............................
வயது ..............................
விலாசம் ..............................

ஒப்பம்: ..............................

### விதிகள்

1. இந்தப் போட்டியில் சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட் மலர் அன்ட் பிப்ஸ் (இலங்கை) லிமிட்டெட், கிரான்ட் அட்வேர்ட்டைஸிங் (இலங்கை) லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களோ அவர்களின் குடும்பத்தவர்களோ பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
2. இந்தப் போட்டி சம்மந்தமாக எத்தகைய கடிதப் போக்குவரத்தும் நடைபெறமாட்டாது.
3. நீதிபதிகளின் தீர்ப்பே இறுதி முடிவாக இருக்கும்.

சோப்புகளில் ராணி ராணி சந்தன சோப்
சுவதேசி இன்டஸ்ட்றியல் வேர்க்ஸ் லிமிட்டெட், கந்தானை.

GRANT-37


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வட்டுக்கோட்டை, ஞாயிறு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் முடிவுற்றன. யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் பாரியாரும் விசேஷ விருந்தினராகக் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்கினுர்.

1500 மீட்டர் ஓட்டத்தை 4நிமி.40.5 செக்கனில் 1964-ல் செல்வன் எஸ். செல்வராசா ஓடி ஈட்டிய சாதனையை இவ்வாண்டு ஏ. விக்னராசா 4நிமி.39 செக்கனில் ஓடி முறியடித்தார். 100 மீட்டர் ஓட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட செல்வன் ஈ. தங்கவடிவேல் 13 செக்கனில் ஓடி முந்திய சாதனையை முறியடித்தார். இவ்வாண்டில் பின் வருவோர் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆ இரவிநேசன் அதி மேற் பிரிவு, எஸ் யேசுதாசன் மேற் பிரிவு, ஈ. தங்கவடிவேல் மத்திய பிரிவு, ஜே தருமசீலன் டி. பாலசுப்பிரமணியம் [14 வயதுக்குள்], ஆர். இராசகுமார் கீழ்ப்பிரிவு ஆர். நவரஞ்சனி மேற்பிரிவு, எஸ். ஜயந்தி மத்திய பிரிவு, எஸ். இரஞ்சனி கீழ்ப்பிரிவு.

பின்வரும் இருவரும் இவ்வாண்டில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஏ விக்னராசா, ஈ. தங்கவடிவேல்.

இல்லங்களில் ''ஹேஸ்டிங்ஸ்' 603 புள்ளிகள் பெற்று சாம்பியன் ஆனது. 'ஆபிரகாம்ஸ்', 'பிரவுண்ஸ்'' ஹிச்கொக்ஸ்' இல்லங்கள் முறையே 548,487,455 புள்ளிகளைப் பெற்றன.

### விவசாயிகளுக்கு கடன் வசதி

பூநகரி, ஞாயிறு

காரியாலை நாகபடுவான் குடியேற்றத்திட்ட வாசிகளுக்குப் பல்லவராயன் கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமூலம் அரசாங்கத்தின் சிபார்சின்படி விவசாயிகளுக்கு சில வங்கிகள் புதிய முறை கடன் திட்டப்படி கடன் வழங்க முன்வந்துள்ளன. இச்சங்கத்தில் முன்பு அங்கத்தவர்களாகச் சேர்ந்து சங்குப் பணம் நிலுவையிலுள்ளவர்களும் இதுவரையில் அங்கத்தவர்களாகச் சேராதவர்களும் உடன் அங்கத்தவராகச் சேர்வதன்மூலம் கடன் பெற்று விவசாயம் செய்ய சந்தர்ப்ப மேற்பட்டுள்ளதாகவும் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் இவர்கள் கடன் பெற விண்ணப்பிக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

### மயிலிட்டிக்கு வெற்றி

காங்கேசன்துறை, ஞாயிறு

மயிலிட்டி விளையாட்டுக் கழகத்திற்கும், ஊறணி இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் காங்கேசன்துறை பட்டினசபையின் ஆதரவில் பட்டினசபையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் மயிலிட்டி 3-1] கோல்களால் வெற்றியீட்டியது,

மயிலிட்டி விளையாட்டுக் கழகத்திற்கு திரு. பி. பத்மநாதன் தலைமை தாங்கினுர். ஊறணி விளையாட்டுக்கழகத்திற்கு திரு. இ. ஞானசீலன் தலைமை தாங்கினுர். காங்கேசன்துறைப் பட்டின சபை நடத்தும் உதைபந்தாட்ட சாம்பியன் போட்டிக்கு திரு. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

### விளையாட்டு மைதானம

பூநகரி, ஞாயிறு

பூநகரி மகா வித்தியாலயத்திற்கு ஒரு நிரந்தர விளையாட்டு மைதானம் இல்லாக் குறை விரைவில் நீங்கும். வித்தியாலயத்தையொட்டியுள்ள தனியார் காணி ஒன்றை அரசாங்கம் சுவீகரித்து கல்வித் திணைக்களகத்திடம் கையளித்துள்ளது. அண்மையில் இக் காணியை பூநகரிக் காரியாதிகாரி திரு. என். செல்வநாயகம் வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். குமாரசாமியிடம் கையளித்தார். மேலும் இரு துண்டுக் காணிகளைக் கையளித்தவுடன் மைதானம் திருத்தும் வேலைகள் ஆரம்பமாக இருக்கின்றன.

### மண்சந்தை

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை அம்மன் கோவிலடியில் மணல் விற்கப்படுகிறது. தினமும் காலை 8 மணிக்கு இவ்வியாபார இடம் ஒரு மணல் சந்தையாகக் காட்சியளிக்கிறது. சுழிபுரம் திருவடிநிலையில் களவாக அள்ளப்படும் மணலே இவ்விதம் விற்கப்படுவதாகவும், இதுபற்றிப் பொலிஸாரோ கிராம சேவகரோ கவனிப்பதில்லையெனவும் பேசப்படுகிறது.


அந்தியகால சகாயநிதிச்சங்கம் லிமிற்றெட்

330, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

(பதிவு இலக்கம் S/132)

ஓர் நற்செய்தி

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 21 வயதுக்கு மேற்பட்ட 65 வயதுக்குட்பட்ட சுகதேகிகளாயுள்ள ஆண், பெண் இரு பாலாரையும் அங்கத்தவர்களாகச் சேர்ப்பதற்கான ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளோம். ஒரு குறிப்பிட்ட தொகையினரே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இத்திட்டம் அமுலாகும் திகதியை எதிர்பாருங்கள். சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

நடைமுறையிலிருக்கும் திட்டத்தின்படி 1955-ம் ஆண்டு தொடக்கம் 1966-ம் ஆண்டு முடிய இறந்த அங்கத்தவர்களுக்கு ஆறு இலட்சத்து அறுபத்தேளாயிரத்து முன்னூற்றி எண்பத்தைந்து ரூபா எண்பத்திரண்டுசதம் மரணசகாயப் பணமாகக் கொடுத்திருக்கிறோம். 21 வயதிற்கு மேற்பட்ட 55 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். மாத சந்தா ரூபா 5/-. மரண உடன் செலவுக்கு ரூபா 350/-. அந்தியேட்டிக்கு ரூபா 150/-. மிகுதி பிரமாணங்களுக்கமைய வழங்கப்படும்.

கூட்டம:-

சங்கத்தின் 12-வது வருடாந்த பொதுக்கூட்டம் நிகழும் பிலவங்க வருடம் ஆனிமாதம் 15-ந்திகதி [29-6-67] வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு காரியாலய மண்டபத்தில் நடைபெறும்-

செ. முத்துத்தம்பி தலைவர். | இ. சோமலிங்கம் காரியதரிசி. | வ. த. பசுபதி தனதிகாரி.



50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்

அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர் உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.




உங்களுடைய அடுத்த பெரிய சுவீப்புகளில் முதல்பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு அவர்களின் பரிசுத் தொகையிலிருந்து கீழ்க்காணும் கார்களை வாங்க சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

சீட்டிழுப்பு இல. 146 தேதி 16-6-67
புத்தம்புதிய பேர்ஜோ 404 கார் ரூ.17,950/- *


சீட்டிழுப்பு இல. 146

சீட்டிழுப்பு இல. 147 தேதி 23-6-67
புத்தம்புதிய்ரெனேல்ட் கோர்டினி கார் ரூ. 11,500/- *


சீட்டிழுப்பு இல. 147

* இவை தீர்வை உள்ளடங்கிய சாதாரண கம்பெனி பட்டியல் விலைகளாகும். இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின் 14 நாள்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும், அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவரை தெரிவு செய்ய ஒரு குழு

கொழும்பு, திங்கள்

இலங்கையின் மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக ஐந்து பேர் கொண்ட கமிட்டி நிறுவப்படவிருக்கிறது. தேசிய கல்விச்சபை இவ்வாறு தீர்மானித்திருக்கிறது.

ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்குத் தகுதி பெற்றுள்ள மாணவர்கள் எல்லோருக்கும் பல்கலைக்கழகத்தில் இடமில்லாததால் அந்த மாணவர்களில் தகுதி பார்த்து தெரிவுசெய்வதற்கு இந்தக் குழு நியமிக்கப்படவிருக்கிறது.


**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Dale Robertson
Martha Hyer
in
**BLOOD ON THE ARROW**



**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
**FROM CHINA with LOVE**



**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
**சொலுங்கேத் சொலு**
[சிங்களம்]


## யாருடைய பேனு?

யாழ்ப்பாணம், செவ்.

நேற்று மாலை யாழ்ப்பாணம் பெரியதபால்நிலையத்தில் தவறுதலாக விட்டுச்சென்ற பேனுவொன்று ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும்.

## மா எதிர்ப்பாளர் கையில் ஹொனுல்

ஹங்கொங், ஜூன் 12

மா-சே-துங் எதிர்ப்பாளர்கள் ஹொனுல் மாகாணத்தைக் கைப்பற்றியிருப்பதாக இங்கிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.


**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி கணேசன்
லலிதா
நடித்த
**வள்ளியின் செல்வன்**



**இப்பொழுது நடைபெறுகிறது!**
**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈரோஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**மொடேர்ன்** [பண்டாரவளை] **விஜிதா** [ஹட்டன்] **தீவொளி** [நுவரெலியா]
**கல்யாணி** [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
**ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,**
**நாகேஷ்**



வி. கே. ஆர். பிக்சர்சின்
**செல்வம்**


## பக்திநிறைந்த....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

க்கு பூஜையுடனும் தேவார பாராயணத்துடனும், விழா ஆரம்பமாகியது. விழா அரங்கில் நாவலர் பெருமான் படமும், பெரியபுராண ஏட்டுச் சுவடியும் பூஜைசெய்துவைக்கப்பட்டிருந்தன. ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட ஆயிரக் கணக்காணவர்கள் விழாவுக்குச் சமுகம்கொடுத்திருந்தார்கள்,

திருமுறை ஓதலை அடுத்து பெரிய புராணபடனம்நடைபெற்றது. திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், சுந்தரமூர்த்தி நாயனார் புராணம் ஆகியனபற்றி விரிவுரைநிகழ்த்தப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் மேலும் குறிப்பிட்டதாவது.

ஆண்டவனின் திருவடிகளை உண்மையான பக்தியோடு சிந்திப்பதும், தனைப் பூஜை செய்வதுமே உண்மையான பண்பு என சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார். இதனை அண்மைக் காலத்தில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் நன்கு உணர்ந்து விளக்கியுள்ளார்சிவதொண்டர்கள்மேல் எவன் ஒருவன் அன்பில்லாதவனோ அவன் சிவனிடத்தேயும்அன்பில்லாதவனுகை மதிக்கப்படுவான். சேக்கிழார் பெருமானுக்கு நாம் இன்று விழா எடுக்கும் போது சிவதொண்டு தான் எல்லாத் தொண்டுக்கும் தலையாய தொண்டு என்பதை மறக்கக் கூடாது.

திரு. ஞானப்பிரகாசம் பேசுகையில் உலகிலுள்ள மற்றைய எல்லா மதங்களுக்கும் தலங்கள் இருக்கையில் இந்து சமயத்துக்கு ஒரு தலைவர் இல்லாததையே சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டுள்ளார் என்ருர். இன்னும் பலர் பேசினுர்கள். விழா இன்று காலையும்தொடர்ந்து நடைபெறும். [ந. நி.]

### மீனவர் பிரச்னை

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவில் உள்ள மீனவர்கள் பிரச்சனை ஒரு புறம் தீர்க்கப்பட்டு நிம்மதியான சூழ்நிலை உருவாகிவரும் தருணத்தில் செம்மலை அளம்பில் நாயாறு ஆகிய இடங்களில் வந்திருக்கும் வெளி ஊர் மீனவர்கள் தங்களையும் கள்ளப்பாடு என்னுமிடத்தில் முல்லைத்தீவில் மீனவர்களுடன் மீன் பிடிக்க விட வேண்டும்என்று புதிய பிரச்சனையைக்கிளப்பியுள்ளதாக தெரியப்படுகிறது. இதனுல் அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு முல்லைத்தீவுக்காரியாதிகாரி திரு. கே. தயாபரன் நடவடிக்கை எடுத்து இதுபற்றி வவனியா மாவட்ட அதிபர் திரு. பீ. சீ. பெரேராவுக்கு அறிவித்துகு அவர் முல்லைத்தீவுக்ப் விரைந்துவந்தார்,

முல்லைத்தீவில் உள்ள சம்மாட்டியார் மற்றும் மீனவர்கள், செம்மலை அளம்பில் நாயாறு மீனவர்கள் யாபேரையும் ஒன்று கூட்டி முல்லைத்தீவுக்காரியாதிகாரி அலுவலகத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினுர். அதில் அவரும் திரு. கே. தனபாலனும் இப்பிரச்னையைத் தீர்க்க முயன்றனர்.

மாவட்ட அதிபர் திரு. பீ. சீ. பெரேரா நாயாறு செம்மலை அளம்பில் மீனவர்களை இரண்டொரு நாட்களுக்குத் தான் மீன்பிடி அமைச்சருடன் பேசி இப்பிரச்னையைத் தீர்த்து வைப்பதாகவும்அதுவரை அமைதியாக இருக்கும்படியும் வேண்டிச் டிச்சென்றுர். அதுவரை எதுவித அசம்பாவிதங்களும் வராதபடிபார்க்குமாறு முல்லைத்தீவுப் பொலிசார், காரியாதிகாரி [illegible] உத்தரவிட்டுள்ளார்.

# மந்திரிகள் இருவர் கல்முனை விரைகிருர்கள்

## அமைதி ஏற்படுத்த முயற்சி

கொழும்பு, திங்கள்

தொழில்மந்திரி ஜனுப் எம். எச். முகம்மதுவும், உள்ளூராட்சிமந்திரி செனட்டர் திருச்செல்வமும் கல்முனைக்கு விரைந்துசென்று சமாதானமுயற்சிகளில் ஈடுபடவிருக்கிருர்கள்.

கல்முனையில் தகராறுகளுக்குள்ளாகியிருக்கும் இருபகுதி மக்களையும் மந்திரிகள் இருவரும் நேரில் சந்தித்து வெறுப்புணர்ச்சிகளைத் தணிக்க முயற்சி செய்வார்கள்.

### எறிகுண்டு

இன்று காரைதீவு வீதி சந்தியில் ஒரு எறிகுண்டு கண்டெடுக்கப்பட்டது. சம்மாந்துறை பொலிஸ் அதிகாரியொருவர் இந்தக் குண்டைக் கண்டெடுத்தார்.

கல்முனையில் மேலும் அமைதி குலையாதவகையில் பார்த்துக் கொள்வதற்கு பொலிசார் மிகவும் விழிப்பாக இருந்துவருகிருர்கள்.

## நீர்கொழும்பு உபதேர்தல்

கொழும்பு, திங்கள்

நீர்கொழும்பு தொகுதி உபதேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் நாளை செவ்வாய்க்கிழமை தங்கள் அபேட்சாபத்திரங்களைத் தாக்கல் செய்வர்.

திரு. குயின்டன்பெர்னுண்டோவின் மரணத்தினுல் இந்த உபதேர்தல் நடைபெறுகிறது.

இந்த உபதேர்தலில் யு, என். பி. அபேட்சகராக திரு. டென்ஸில் பெர்னுண்டோ போட்டியிடவிருக்கிருர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று தனது அபேட்சகரைத் தெரிவுசெய்யும்.

## தெதுருஓயா கொலை வழக்கு

### எதிரி விடுதலை

கொழும்பு, திங்கள்

தெதுருஓயா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஜெஸ்டன் என்பவர் விடுதலை செய்யப்பட்டார். தெதுருஓயாச் குளக்கரையில் இளம்பெண்ணின் தலையில்லாத முண்டம் கிடக்கக் காணப்பட்டதும் அதைத் தொடர்ந்து ஜெஸ்டன் என்னும்கார் சாரதி மீது கொலைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டதும் தெரிந்ததே. குளியப்பிட்டி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நடந்த இவ்வழக்கு விசாரணை முடிவில் ஜெஸ்டனை சுப்ரீம்கோர்ட் விசாரணைக்கு நிற்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஜெஸ்டனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கு போதிய சாட்சியங்களில்லையெனக் கூறி அட்டர்ணி ஜெனரல் தெரிவித்த யோசனையைத் தொடர்ந்து ஜெஸ்டனை நீதிபதி நேற்று விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## புதியநியமனம்

புன்னலைக்கட்டுவன், திங்கள்

உரும்பராய் இந்துக் கல்லூரி விவசாய போதனுசிரியர் திரு. வி. நமோலிங்கம் கல்லோயா சபையின் கீழ் புதிய நியமனம் பெற்றுள்ளார். கல்லூரி ஆசிரியர் சங்கம் விரைவில் இவருக்கு ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடாத்தவிருக்கிறது,

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மாடு திருட முயன்றனராம்

### சிறையும் அபராதமும்

சாவகச்சேரி, திங்கள்

இவ்வருடம் ஜனவரி மாதம் 21ம் திகதி பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த ரி. ஐயாத்துரை என்பவருக்குச் சொந்தமான பசுமாடு ஒன்றைத் திருட எத்தனித்ததாகச் சவிரி செல்வம், முருகன் கந்தசாமி ஆகிய இருவர்மீதும் கிளிநொச்சிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாவகச்சேரி மாஜிஸ்ற்ரேட் திரு. கே. விக்னராஜா எதிரிகள் இருவரையும் குற்றவாளிகளாகக்கண்டு முதல் எதிரிக்கு இரண்டு மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும், இரண்டாவது எதிரிக்கு 100 ரூபா அபராதம் அல்லது 4 வாரச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## பெண் தற்கொலை

உடுப்பிட்டி, திங்கள்

நோயின் வேதனை தாங்காத பெண் தற்கொலை செய்து உயிரை மாய்த்த சம்பவம் துன்னலை வடக்கில் நிகழ்ந்துள்ளது. நடேசு என்பவரின் மனைவியான மரியம்மா [வயது 40] என்பவர் சிலகாலமாக நோயினுல் வருந்திவந்தாரென்றும் நோயின் வேதனையைத் தாங்காது கிணற்றில் குதித்துத் தற்கொலை புரிந்ததாகவும் கூறப்பட்டது. மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### ஜீவனுமசம கட்டாதவர்

உடுப்பிட்டி, திங்கள்

தனது மனைவிக்குக் கொடுக்க வேண்டிய 3மாத ஜீவனும்சப் பணத்தைக் கொடுக்கத் தவறிய செல்லத்துரை என்பவருக்குப் பருத்தித்துறை நீதவான் 2 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

### பரீட்சைமுடிவுவந்தும..

உடுப்பிட்டி, திங்கள்

அண்மையில் வெளிவந்த ஜி. சி. ஈ. [சாதாரணம்] பரீட்சை முடிவுகளில் சிலமாணவர்களின் பெறுபேறுகள் குறிக்கப்படாமல் அனுப்பப்பட்டுள்ளன. நெல்லியடி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இருமாணவர்களின் பெறுபேற்று அட்டவணையில் சமயபாடத்தின் பெறுபேறுகள் குறிக்கப்படாததால் பிரஸ்தாப இரு மாணவர்களும் கல்லூரி அதிபர் மூலமாக நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியப்படுகிறது.

நாகர்கோவில், குடாரப்பு என்னுமிடத்தைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சை முடிவும் அட்டவணைப்பத்திரத்தில் கணக்கியல் பாடத்தின் பெறுபேறு பதியப்படாததால் கல்வி இலாகாவிற்குத் தந்தி மூலம் புகார் செய்துள்ளார்.

### லட்சார்ச்சனை

உரும்பராய், திங்கள்

உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவிலில் இன்று லட்சார்ச்சனை ஆரம்பமானது. 21-ந்திகதி அர்ச்சனை பூர்த்தியாகும். பிரசங்கங்களும் இசைக்கச்சேரிகளும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org